நன்றியைத் தெரிவிப்பதோடு, அந்த வேதாரண்யம் என்பது சர்தார் வேதரத்தினம் பிள்ளை பிறந்த ஊர்; மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட ஊர்; இப்போது அந்த ஊருக்கு விட்டிருப்பது சாதாரண பஸ்; மேலும் அந்த பகுதியிலே இருந்து வருவதற்கு ஒரு சூப்பர் பஸ்ஸை விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் வண்டி கேட்கிறார்கள். அதற்கடுத்து ஏ. சி. பஸ் கேட்பார்களோ என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவரவர்களே, அந்தத் தடத்திலே அடிக்கடி பழைய பேருந்தை விடுவதால், டயர் பங்ச்சர் ஆகி இரண்டு மணி, மூன்று மணி என்று காலதாமதமாக வருகிற நிலைமைகள் இருக்கிறது. சூப்பர் டீலக்ஸ் பஸ் விடுவதற்கு முன்னால், புதிய பேருந்தை விடுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போகிறார் என்பதற்காக மட்டும் நாம் புதிய வண்டியைவிட முடியாது. பழைய வண்டிகள் பழுதாகி இருந்தால் அது நிச்சயமாகக் கவனிக்கப்படும். ஆனால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரை நாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பேருந்துகளை மாற்றி வருகிறோம். அதை நல்லமுறையில் கண்காணித்தும் வருகிறோம். டயர் 'பங்ச்சர்' ஆகி நிற்பது என்பது வெயில் காலத்தில் அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏற்பட்டிருக்குமே தவிர, வேலையில் கவனக் குறைவாக இருந்த காரணத்தால் அப்படி ஏற்பட்டிருக்காது. இருந்தாலும்கூட அதைக் கவனிக்கச் சொல்லி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாங்கள் உத்தரவிடுவோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் கூட கவனிக்கப்படும்.

கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழக பணிமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 986. திரு. ஆர். டி. கோபாலன் :—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிற்பதற்கு நிரந்தரமான டிப்போ கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதற்கான திட்டம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் உள்ளது.

LEGISLATIVE ASSEMBLY ... ALONE TRIUMPHS

திரு. ஆர். டி. கோபலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போ கட்டுவதற்கு கம்பத்தில் இடம் வாங்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேவைத் தலைவர் அவர்களே, 3·26 ஏக்கர் பரப்பளவில் ஒரு இடத்தைப் பார்த்து அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் எழுதியிருக்கிறது. அது வந்தவுடன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஆர். டி. கோபலன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இடத்தின் விலை அதிகமாக இருக்கிற காரணத்தினால் காலதாமதம் ஏற்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, விலைபற்றிய எந்தத் தகவலும் இல்லை. அதனால் காலதாமதமாவதாகத் தகவல் இல்லை. ஆனால் முறைப்படி சட்டப்படி ஆர்ஜிதம் செய்கிறபோது என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இருந்தாலும்கூட விரைவாகச் செய்ய வேண்டுமென்று கடிதத்தை எழுத இருக்கிறோம். ஆகவே அது விரைவாகச் செய்யப்படும்.

திரு. ஜே. ஹேமசந்திரன் : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக இருக்கக் கூடிய பேருந்துகளை, பல இடங்களிலே டெப்போக்கள் இல்லாத காரணத்தினால் வெயிலிலும், மழையிலும் நிறுத்த வேண்டிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அவைகளுக்குச் சேதம் ஏற்படுகிறது. குறிப்பாக கேரளா, தமிழ்நாடு எல்லைப் பகுதிகளிலே களியக்காவிளையில் பல பேருந்துகள் ஓய்யன் ஏரிலே நிறுத்தப்படுகின்றன. எனவே அப்படிப்பட்ட இடங்களிலேயாவது டெப்போக்களை உடனடியாகக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, கடந்த 27ஆம் தேதி மானியத்தின்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நிறைய இடங்களில் டெப்போக்களைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அன்றைக்குப் பேசினார், இதுபற்றி பேசினாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. இப்போது அதைப்பற்றிச் சொல்லி இருக்கிறார். முடியும் என்றால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே திருவள்ளுவர் போக்குவரத்திலே இருக்கக்கூடிய பஸ்களுக்கு பணிமனைகள் கட்டுவதற்கு முன்பு இடைக் காலத்திலே பக்கத்

1981 மே 5]

திலே இருக்கின்ற அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய பணி மனைகளில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளை நிறுத்துவதற்கு உதவி செய்யவேண்டுமென்று அரசாங்கம் அவர்களுக்கு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அந்தந்த போக்குவரத்துக் கழகத்திற்கு என்று தனித்தனி பணி மனைகள் இருப்பதுதான் சரியாக இருக்கும், எந்தவிதமான தவறும் நடக்காமல் இருக்கும். தற்போது பெரிய பழுதுகள் ஏற்பட்டுவிட்டால் அதை அவர்கள் செய்யவேண்டுமென்று ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் நாம் சொல்லியிருக்கிறோம். அது நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, நேற்றைய தினத்தைப் போலவே இன்றைக்கும் இந்த மாமன்றத்தினுடைய பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சபைக்கு வரவில்லை. இன்றைக்கும் நாளைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மானியமான காவல் துறை மானியம் வர இருக்கிறது. ஆனால் செய்தி ஏடுகளிலே பார்க்கிறோம், இந்தச் சட்டசபை கூட்டத் தொடர் முடியும் வரையில் அவர்கள் கலந்துகொள்வதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். ஆகவே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள் இல்லாமல் இந்தச் சபைக் கூட்டம் நடக்குமானால் அது முழுமை பெற்றதாக நான் கருதவில்லை. அவர்கள் கலந்து கொள்ளாதது குறித்து தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் அவர்கள் கலந்துகொள்ளக்கூடிய வகையிலே சூழ்நிலையை உருவாக்குவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தாங்கள் நேற்று இந்த அவையிலே அறிவித்து இருக்கிறீர்கள். பிரதான எதிர்க்கட்சியாக விளங்குகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அலுவல் ஆய்வுக் குழுவைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும் கலந்தாலோசித்